செ.வெ.எண்: 843/2016 நாள்: 29.11.2016

# பத்திரிகைச் செய்தி

**குரூப்-I (GROUP -I SERVICES PRELIMINARY EXAM) பணிக்கான தேர்விற்கு இலவசப் பயிற்சி**

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் 19.02.2017 அன்று நடத்தப்படவுள்ள குரூப்-I (GROUP -I SERVICES PRELIMINARY EXAM) பணிக்கான முதல்நிலைத் தேர்விற்கு, நாகர்கோவில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இயங்கி வரும் தன்னார்வ பயிலும் வட்டம் மூலமாக 02.12.2016 அன்று முதல் நடைபெற உள்ளது.இப்பயிற்சி வகுப்பானது அலுவலக வேலை நாட்களில் பிற்பகல் 2.00 மணி முதல் 5.00 மணி வரை நடத்தப்படவுள்ளன.

இலவசப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள ,குரூப்-ஐ தேர்வுக்கு விண்ணப்பித்ததன் நகல்,வேலைவாய்ப்பு அடையாள அட்டை, பாஸ்போட் சைஸ் போட்டோ ஆகியவற்றுடன் நாக்கோவில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு 04652-261191 என்ற எண்ணை தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்ட செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.